# பள்ளிக்கு முந்தைய (Pre-school) விசேட கவனிப்புக் கல்வி

### பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்வி என்றால் என்ன?

பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்வி என்பது, வளர்ச்சிப் பிரச்சினைகள் மற்றும்/அல்லது ஊனமுற்ற, பள்ளி செல்லும் வயதுக்கும் குறைந்த குழந்தைகளுக்கு விசேட கவனிப்புச் செயல்பாடுகள் மூலம் ஆதரவு அளிக்கிறது; அப்படிப்பட்ட குழந்தையை வளர்க்கின்ற சவாலை எதிர்கொள்ளும் பெற்றோர் அல்லது குழந்தைக்கு நெருக்கமானவர்களுக்கு ஆதரவும் ஆலோசனையும் அளிக்கிறது. பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்வியில்- தேவைகளைக் கண்டறிதல், மதிப்பிடுதல், ஊக்கமளித்தல், ஆலோசனை அளித்தல் ஆகியவை அடங்கும்.

### பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்வி எப்படிப்பட்ட குழந்தைகளுக்குத் தேவை?

பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்வி என்பது, உடலியக்கம், உணர்ச்சிகள், மற்றவர்களுடன் கலத்தல், பேச்சு மற்றும்/அல்லது மன வளர்ச்சி போன்ற விஷயங்களில் பிரச்சினைகளோ அல்லது ஊனமோ உள்ள, பள்ளி செல்லும் வயதுக்கும் குறைந்த மதலையருக்காக ஆனது. ஒரு குழந்தைக்கு விசேட கவனிப்புக் கல்வி தேவைதானா என்பதைக் கண்டறிய விசேட கவனிப்பு மதிப்பீடு உதவுகிறது. இந்த மதிப்பீடு, குழந்தைக்கு கவனமாக உருவாக்கப்பட்ட ஆதரவும், பெற்றோருக்கு ஆலோசனையும் அளிப்பதற்கான அடிப்படையாக அமைகிறது.

### பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்வியில் வேலை நடைமுறைகள் என்ன?

உடல் மற்றும் உள்ளம் சார்ந்த முழு ஆதரவுதான் முதன்மையானது. நடத்தை, பேச்சு, அசைவுகள், கவனிப்பு, தொடர்புகளைக் கண்டறிதல், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளுதல், தனிமை மற்றும் உணர்ச்சிகள் ஆகிய விஷயங்களில் ஆதரவு அளிக்கப்படுகிறது. கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்கள் மற்றும் அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களைக் கொண்டு, குழந்தை அடைகிற வளர்ச்சியைப் பொறுத்து வடிவமைக்கப்பட்ட ஆதரவு அளிக்கப்படுகிறது. குழந்தையுடன் கவனிப்புப் பணி, அதன் வீட்டைச் சுற்றியுள்ள பழக்கமான இடங்களில்தான் பொதுவாக நடைபெறும்; ஆனால் சில சந்தர்ப்பங்களில் விசேட கவனிப்புச் சேவை அலுவலகத்தில், குழந்தையுடன் நேருக்கு-நேர் என்ற வகையிலோ அல்லது மற்ற குழந்தைகளுடன் சேர்த்தோ நடத்தப்படுவதும் உண்டு. பள்ளிக்கு முந்தைய கல்வியின் ஆசிரியர், குழந்தையை வளர்ப்பதிலும் அதை ஊக்குவிப்பதிலும் பெற்றோருக்கு ஆதரவாக இருக்கிறார்; குழந்தையின் நடத்தை மற்றும் வளர்ச்சிப் பிரச்சினைகள் பற்றிய கேள்விகளைப் பற்றிப் பேசித் தெளிவுபடுத்துகிறார்.

குழந்தையின் வளர்ச்சியில் அர்த்தமுள்ள இலக்குகளை நிர்ணயிப்பதற்காகவும், குழந்தைக்கு ஊக்கமளிக்கவும், பெற்றோர் மற்றும் குழந்தையுடன் தொடர்புடைய மற்றவர்களுடன் (மதலையர் பள்ளி ஆசிரியர், கல்விசார்ந்த உளவியல் மருத்துவர், சிகிச்சை அளிப்பவர், மருத்துவர் போன்றவர்களுடன்) கலந்து ஆலோசிப்பதும் முக்கியமாகத் தேவைப்படுகிறது.

சிறப்புக் கவனிப்புத் தேவைப்படும் குழந்தைகளை முதலிலேயே கண்டறியவும், ஆதரவளிக்கவும், பொதுமக்களுடன் இணைந்தும் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளது.

### பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்வியின் மூலம் எத்தனை காலம் குழந்தை பயன்பெறலாம்?

ஆதரவுக்கான கால அளவு என்பது குழந்தையின் வளர்ச்சி அளவைப் பொறுத்தும், பெற்றோரின் தேவைகளைப் பொறுத்தும் அமைகிறது. இது, சில மாதங்கள் முதல் சில ஆண்டுகள் வரை இருக்கலாம்; அதிகபட்சமாக, குழந்தை பள்ளிக்குச் செல்லும்போது இது முடிவடையும். பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்வி வழமையான முறையில் (சுமாராக வாரத்தில் ஒரு வகுப்பு) பெற்றோரின் ஒப்புதலுடன் நடைபெறும்.

### விசேட கவனிப்பு மதிப்பீட்டுக்கு குழந்தையை யார் பதிவு செய்யலாம்?

ஒரு குழந்தையின் பெற்றோரோ அல்லது பெற்றோரின் ஒப்புதலுடன் தொழில்முறை கவனிப்பாளர்களோ பதிவு செய்யலாம். குழந்தை பிறந்தவுடன் துவங்கி, மதலையர் பள்ளியில் முதலாண்டு முடிவதற்குள் எப்போது வேண்டுமானாலும் பதிவு செய்யலாம்.

### பள்ளிக்கு முந்தைய விசேட கவனிப்புக் கல்விக்கு கட்டணம் யார் செலுத்துகிறார்கள்?

மதிப்பீடு செய்தல் மற்றும் ஆதரவுக்கான கட்டணங்கள், காப்பீட்டுத்துறை (invalidity insurance) மற்றும் கன்டோன் ஆணையத்தால் (Canton authorities) செலுத்தப்பபடுகின்றன.